

ஆசிரியர் : எஸ்.அஜீந்தன் BA

புலமைப்பாதை

பேரிடர் கால இணைய வழி பயிற்சித் தாள்

2020

4

தரம்



தொடர் 5

மாணவர் பெயர்

பரீட்சை வினாத்தாளை PDF வடிவில் பெற்றுக்கொள்ள உங்கள் பெயர் விலாசத்தை Viber இல் அனுப்பி வையுங்கள்.

Viber No : 077 26 333 89

www.tnou.lk

❖ தரப்பட்டுள்ள சொற்களில் ஒன்று அல்லது இரண்டு எழுத்துக்களை நீங்கிப் புதிய சொற்களை உருவாக்குவோம்.

01) இம்மை – ஓர் எழுத்தினை நீக்கினால் கிடைப்பது கண்ணைப் பாதுக்காப்பது .....

02) பயணம் - ஓர் எழுத்தினை நீக்கினால் கிடைப்பது அச்சம் .....

03) வானரம் - ஓர் எழுத்தினை நீக்கினால் கிடைப்பது ஆகாயத்திற்கு ஒத்த சொல் .....

04) அசுத்தம் - ஓர் எழுத்தினை நீக்கினால் கிடைப்பது தூய்மை - .....

05) கானகம் - ஓர் எழுத்தை நீக்கினால் கிடைப்பது பாட்டு .....

06) மாட்சி – ஓர் எழுத்தை நீக்கினால் கிடைப்பது ஒரு மாதத்தின் பெயர் - .....

07) எழுத்து - இரண்டு எழுத்தினை நீக்கினால் கிடைப்பது வினாக்களை கேட்பது .....

www.lkedu.lk

08) பந்தி – ஒரு எழுத்தினை நீக்கினால் கிடைப்பது – தலைவனுக்கு ஒத்த சொல் .....

09) மக்கள் - ஓர் எழுத்தினை நீக்கினால் புத்திரி வருவாள் - .....

10) வாழ்க்கை - இரு எழுத்துக்களை நீக்கினால் மரங்களில் ஒன்று .....

11) அவமானம் - இரு எழுத்துக்களை நீக்கினால் அடவியின் ஒத்த பதம் .....

12) கவின் - ஓர் எழுத்தை நீக்கினால் கவிஞரால் உருவாக்கப்படுவது கிடைக்கும் .....

13) கருணை – ஓர் எழுத்தினை நீக்கினால் வேடன் கையில் இருப்பது .....

14) ஓட்டம் - ஒரு எழுத்தினை நீக்கினால் கிடைப்பது – நீர் மார்க்கத்திற்குரியது - .....

❖ வினாக்களுக்கு விடை எழுதுக.

01) உயிர் எழுத்துக்கள் எத்தனை? அவற்றை எழுதுக?

.....

.....

02) மெய் எழுத்துக்கள் எத்தனை? அவற்றை எழுதுக?

.....

.....

.....

www.lkedu.lk

03) உயிர் மெய் எழுத்துக்கள் எத்தனை?

.....

04) ஆய்த எழுத்து எத்தனை?

.....

05) தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?

.....

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே செம்மஞ்சள் நிறப் பந்துபோல மெதுவாக மேலெழுகிறான். கதிரவனைக் கண்ட நிலவுமகள் தன் கடமையை முடித்து நாணத்துடன் ஒளிந்து கொள்கிறாள். கடிகாரப்பறவைகளான சேவல்களும் கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிவித்து, கதிரவனை வரவேற்கின்றன. ஆலயங்களின் காண்டாமணி ஓசை காதில் கணீரென ஒலிக்கப் கூட்டங்கூட்டமாகப் பறந்து திரியும் பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றது.

01) பந்தியில் குறிப்பிடப்படும் பொழுது எது?

.....

02) கதிரவன் மேலெழும் திசை எது?

.....

03) செம்மஞ்சள் நிறப்பந்து எனக் குறிப்பிடப்பட்டிருப்பது எது?

.....

04) சூரியனுக்கு வழங்கும் வேறு பெயர் ஒன்றினை எழுதுக?

.....

www.ikedu.lk

05) பந்தியில் முதலாவது வாக்கியத்தில் உள்ள அடைமொழியை எழுதுக?

.....

06) கடிகாரப்பறவைகள் என்று குறிப்பிடப்படும் பறவைகள் யாவை?

.....

07) கதிரவனைக் கண்டு நாணத்துடன் ஒளிந்து கொள்பவள் யார்?

.....

08) மகன் என்பதன் எதிர்ப்பாற் சொல் எது?

.....

09) இப்பந்தியில் வந்துள்ள ஒத்தசொல் இரண்டு எழுதுக?

.....

10) ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?

1. பறவை - .....
2. சந்திரன் - .....
3. பாட்டு - .....

11) பிரித்து எழுதுவோம்.

1. காரிருள் - ..... + ...
2. மணியோசை - ..... + ...
3. வண்ணச்சிட்டு - ..... + ...
4. புற்றரைகள் - ..... + ...
5. காலைக்காட்சி - ..... + ...

www.lkedu.lk

12) பின்வரும் வாக்கியங்கள் உயர்திணையா? அ.்றிணையா? என இடைவெளியில் எழுதுக.

1. அரசன் நீதி தவறாது நாட்டை ஆட்சி செய்தான்.

   .....

2. விவசாயி வயலில் வேலை செய்தான்.

   .....

3. மரம் முறிந்து விழுந்தது.

   .....

4. ஆகாய விமானம் வானத்தில் அழகாகப் பறந்தது.

   .....

5. நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார்.

   .....

6. அப்பா வேலைக்குச் சென்றார்.

   .....

7. மான் வேகமாக ஓடியது.

   .....

8. கிளிகள் சுவையான பழங்களைக் கொத்தித் தின்றன.

   .....

9. பசு புல் மேயும்.

   .....

10. வீதியில் வாகனங்கள் வரிசையாகச் சென்றன.

    .....

www.lkedu.lk

13) அடைப்புக்குள் உள்ள சொற்களுள் பொருத்தாமான சொல்லைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

1. நான் ..... (அலரி, அலறி) மரத்திலிருந்து அழகிய மலர்களைப் பறித்தேன்.

2. பாம்பைக் கண்ட சிறுவர்கள் ..... (அலரி, அலறி)க் கொண்டு ஓடினர்.

3. பறவைகள் காலை வேளை ..... (இரை, இறை) தேடிப் பறந்தன.

4. இயற்கை தந்த கொடையான ..... (மரங்களை, மறங்களை) நாம் அழிக்கக்கூடாது.

5. அரசனின் ..... (மரத்தால், மறத்தால்) பகைவர்களிடமிருந்து நாடு காப்பாற்றாப்பட்டது.

14) ஒத்த கருத்துச்சொல்லை இணைப்போம்.

1.	அழகு	சூரியன்
2.	பரிவு	சந்திரன்
3.	ஞாயிறு	அரசன்
4.	மன்னன்	இரக்கம்
5.	திங்கள்	எழில்

www.lkedu.lk

பரீட்சை வினாத்தாளை PDF வடிவில் பெற்றுக்கொள்ள உங்கள் பெயர் விலாசத்தை Viber இல் அனுப்பி வையுங்கள்.

Viber No : 077 26 333 89

❖ சுருக்கக் குறியீடுகள்

01) இ.ம.வ - இலங்கை மத்திய வங்கி

02) இ.மி.ச - இலங்கை மின்சார சபை

03) இ.ஒ.கூ - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

04) இ.பெ.கூ - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

05) இ.ரூ.கூ - இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

❖ தனிச்சொல்லை எழுதுக.

01) ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன் - அட்டவதானி

02) கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி, பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்வு – ஒத்திகை

03) பகையரசருக்குக் கொடுக்கப்படும் திறைப் பொருள் - கப்பம்

04) ஒன்று போல் இருக்கும் மற்றொன்று – போலி

05) ஒரே சமயத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தோன் - சதாவதானி

06) வைத்தியரின்றித் தாமே தமது நோய்க்குச் செய்துகொள்ளும் மருந்து – கைம்மருந்து

07) எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன் - தீருக்கதரிசி

08) அறிஞர்கள் வாதிடும் களம் - பட்டிமன்றம்

09) ஒன்றைப் போலப் பிரதியெடுத்தல் - படியெடுத்தல்

10) ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை – பதிப்புரை

11) இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை – பன்னசாலை

12) புதிதாக செய்த கப்பல், தேர் என்பவற்றை முதன் முதலாகச் செலுத்திப் பார்த்தல் - வெள்ளோட்டம்

13) ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து – மஞ்சரி

14) நூலாசிரியர் ஒருவர் தாமியற்றிய நூலின் முன்னே தனது நூலைப் பற்றிக் கூறும் உரை – முன்னுரை